




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 80 | 4 Pages | 19.10.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 80 | 4 பக்கங்கள் | 19.10.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்**

**விளக்கம்:**
**வரப்போவதைமுன்னேஅறிந்துகாத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.**

## பிரபல குச்சிப்புடி கலைஞர் அருணிமா குமாருக்கு இங்கிலாந்தின் உயரிய பதக்கம்



லண்டன், அக்.19

டெல்லியை சேர்ந்தவர் அருணிமா குமார் (வயது 47). இந்திய கலாசார நடனங்களில் ஒன்றாக குச்சிப்புடி கலைஞராக உள்ளார். 2008ம் ஆண்டு சங்கீத நாடக அகாடமியின் யுவ புராஸ்கர் விருதை பெற்றார். தற்போது இங்கிலாந்தில் அருணிமா குமார் வசித்து வருகிறார்.

இந்தநிலையில் அந்த நாட்டில் உள்ள கலைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான பிரிட்டிஷ் எம்பயர் பதக்கத்திற்கு அவருடைய பெயர் பரிந்துரைக்கப்பட்டது. இந்திய கலாசாரத்தை மேம்படுத்தும் பணிக்காக அருணிமா குமாருக்கு இந்த விருதை மன்னர் சார்லஸ் அறிவித்தார். அதன்படி அவருக்கு இந்த பதக்கம் வழங்கப்பட்டது. இதன்மூலம் பிரிட்டிஷ் எம்பயர் பதக்கம் பெறும் முதல் குச்சிப்புடி நடன கலைஞர் என்ற பெருமையை அருணிமா குமார் பெற்றார்.

## கனடாவில், 3வது முறையாக இந்திய நடிகரின் ஓட்டலில் துப்பாக்கி சூடு




ஒட்டவா, அக்.19

இந்திய நகைச்சுவை நடிகர் கபில் சர்மாவுக்கு சொந்தமான ஓட்டல் கனடா நாட்டில் திறக்கப்பட்டுள்ளது. இந்த ஓட்டல் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரேயில் அமைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்புதான் இந்த ஓட்டல் திறக்கப்பட்டது. இந்த ஓட்டல் மீது கடந்த ஜூலை மாதம் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்துக்கு காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்ஜித் சிங் லட்டி பொறுப்பேற்று இருந்தார். தொடர்ந்து ஆகஸ்டு மாதமும் இந்த ஓட்டலில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்த நிலையில் மூன்றாவது முறையாக கபில் சர்மா ஓட்டலில் மீண்டும் இன்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக, ஊழியர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## லெபனான் நாட்டில் இஸ்ரேல் டிரோன் தாக்குதலில் ஹமாஸ் தலைவர் பலி



ஜெருசலேம், அக்.19

இஸ்ரேல்ராணுவத்துக்கும், ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இடையே 14 மாதங்களாக சண்டை நடந்து வந்தது. அதைத்தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழு த்தானது.

ஒப்பந்தப்படி, லெபனான் நாட்டில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை ஜனவரி மாதத்துக்குள் விலக்கிக் கொள்ள வேண்டும். இஸ்ரேலின் வற்புறுத்தல்படி, இந்த காலக்கெடுவை பிப்ரவரி 18ந் தேதிவரை (இன்று) நீட்டிக்க லெபனான் ஒப்புக்கொண்டது. போர்நிறுத்தத்துக்கு பிறகும் லெபனானின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகள் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது. ஏவுகணைகள், போர் சாதனங்கள் வைக்கப்பட்டுள்ள ராணுவ தளங்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதாக தெரிவித்தது. இந்நிலையில், லெபனான் நாட்டில் இஸ்ரேல் நடத்திய டிரோன் தாக்குதலில் ஹமாஸ் இயக்க தலைவர் முகமது ஷாஹீன் பலியானார். இத்தகவலை இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. அவர் லெபனான் நாட்டில் ஹமாஸ் இயக்கத்தின் செயல்பாட்டுத்துறை தலைவராக இருந்ததாக கூறியுள்ளது. அவர் ஈரானின் நிதியுதவி மற்றும் உத்தரவுப்படி, இ'ஸ்ரேல் மக்களுக்கு எதிராக பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக தெரிவித்துள்ளது. முகமது ஷாஹீன் பலியானதை ஹமாஸ் இயக்கமும் உறுதி செய்துள்ளது. அவரை 'ராணுவ தளபதி' என்று கூறியுள்ளது. லெபனான் ராணுவ சோதனைச்சாவடி அருகே ஒரு கார் தீப்பிடித்து எரியும் வீடியோ வெளியாகி உள்ளது. இஸ்ரேல் படைகள் வெளியேறுவதற்கான காலக்கெடு இன்று முடிவடையும்நிலையில், இத்தாக்குதல் நடந்துள்ளது. அதனால், திட்டமிட்டபடி படைகள் வெளியேறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# எரிவாயு கசிவு காரணமாக வீடு தீப்பிடித்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு நிதியுதவி: முதல்வர்

சென்ன, அக்.19

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், ஈரியூர் கிராமத்தில் எல்.பி.ஜி. சிலிண்டரில் ஏற்பட்ட எரிவாயுகசிவின்காரணமாக வீடுதீப்பிடித்தவிபத்தில்உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி வழங்கிட முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், ஈரியூர் கிராமத்தில் வசிக்கும் பொன்னுசாமி (58 வயது) மற்றும் அவரது மனைவி அனுசுயா (50 வயது) ஆகிய இருவரும் கடந்த 13ந்தேதி இரவுசுமார் 11 மணியளவில் அவர்களது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக எல்.பி.ஜி. சிலிண்டரில் ஏற்பட்ட எரிவாயு கசிவின் காரணமாக வீடு முழுவதும் எரிவாயு பரவியிருந்த நிலையில் லைட்டர் பற்றவைத்தபோது திடீரென தீப்பிடித்து வீடு முழுவதும் சேதம் ஏற்பட்ட நிலையில் மேற்படி பொன்னுசாமி மற்றும் அவரது மனைவி அனுசுயா ஆகிய இருவருக்கும் பயங்கர தீக்காயம் ஏற்பட்டு உடனடியாக கள்ளக்குறிச்சி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பொன்னு




சாமி 16ந்தேதி இரவு சுமார் 11 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அனுசுயா என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தர விட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த பொன்னுசாமியின் குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் நீதிபதி குறித்து அவதூறு: ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரிக்கு ஜாமீன் மறுப்பு

சென்னை அக்.19

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த 27ம் தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை சென்னை ஐகோர்ட்டில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி, தவெக தலைவர் விஜய் குறித்து கண்டனங்களை முன்வைத்தார். அதேவேளை, வழக்கை விசாரித்த நீதிபதி குறித்து சமூகவலைதளங்கள் அவதூறு கருத்துகள் பரப்பப்பட்டன. இது தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டனர்.

அந்த வகையில், கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் நீதிபதி அவதூறு பரப்பியதாக சென்னை கோடம்பாக்கத்தை ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி வரதராஜன் (வயது 64) என்பவரை கடந்த 7ம் தேதி போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட வரதராஜன் காவல்துறையில் கைரேகை பிரிவில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள வரதராஜன் தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்தமனுவை இன்று விசாரித்த நீதிமன்றம் வரதராஜனுக்கு ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்தது. இதையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்டார்



## தீபாவளி பண்டிகையை கொண்டாட வேண்டாம்: தவெக தலைமை உத்தரவு

சென்னை, அக்.19

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பேரவைக் குழுவுக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளை அங்கீகரிக்க சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு தொடர்ந்து மறுத்து வருகிறார். நடுநிலை தவறாமல் செயல்பட வேண்டிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் அரசியல் காரணங்களுக்காக அறம் மற்றும் மரபுகளை மதிக்காமல் செயல்படுவது நியாயமல்ல. இந்த விஷயத்தில் பேரவைத் தலைவரின் செயல்பாடு கண்டிக்கத்தக்கது.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதற்காக சேலம் மேற்குசட்டப்பேரவைஉறுப்பினர்அருள்கடந்தஜூலை3ம்நாள்கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக புதிய சட்டப்பேரவைக் கட்சிக் கொறடாவாக மயிலம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றுடன் 108 நாள்கள் ஆகின்றன. அதேபோல், சட்டமன்றக் குழுத் தலைவர் பொறுப்பிலிருந்து ஜி.கே.மணி நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக தருமபுரி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஸ்வரன், துணைத் தலைவராக மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் சதாசிவம் ஆகியோர் கடந்த செப்டம்பர் 24ம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டு 24 நாள்களாகி விட்டன. இதற்கான எனது கடிதங்கள்பேரவைத்தலைவரிடம்கொடுக்கப்பட்டுவிட்டன.அதுமட்டுமின்றி பல முறை அவருக்கு நினைவூட்டல்கள்அ செய்யப்பட்டுவிட்டன. சட்டப்பேரவையிலும் இது தொடர்பாக பல முறை வலியுறுத்தப்பட்டு விட்டது. ஆனாலும் பயனில்லை.

இந்த விவகாரத்தில் முடிவெடுப்பது மிகவும் எளிதானது. பாட்டாளி மக்கள் கட்சியில் மொத்தமுள்ள 5 உறுப்பினர்களில் ஒருவர் நீக்கப்பட்டு விட்டார். மீதமுள்ளவர்களின் நால்வரின் மூவர் கூடி புதிய நிர்வாகிகளை தேர்வு செய்துள்ளனர். அதற்கு கட்சியின் அரசியல் தலைமைக் குழுவும் ஒப்புதல் அளித்துள்ளது. இத்தகைய சூழலில் கட்சித் தலைவரான நான் அவர்களின் பெயர்களை பேரவைத் தலைவருக்கு அனுப்பியுள்ள நிலையில் அதை ஏற்றுக்கொள்வது தான் முறையாகும். இந்த சிக்கலில் முடிவெடுக்க ஒரே ஒரு நிமிடம் போதுமானது. ஆனால், 100 நாள்களுக்கு மேலாகியும் பேரவைத் தலைவர் முடிவெடுக்கவில்லை.

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பேரவைக்குழு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டிருப்பதை ஆய்வு செய்து வருவதாகவும், விரைவில் முடிவு எடுப்பதாகவும் இதுவரை கூறி வந்த பேரவைத் தலைவர், நேற்று பேரவையில் இந்த சிக்கல் எழுப்பப்பட்ட போது நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிக் கொண்டார் "பேரவையின் மொத்த எண்ணிக்கையில் 10 சதவீதம், அதாவது 24 உறுப்பினர்கள் உள்ள கட்சிகளை மட்டும் தான் பேரவையில் அங்கீகரிக்க முடியும்; அவற்றுக்கு மட்டும் தான் பேரவைக்குழுத் தலைவர் உள்ளிட்ட பதவிகளை அங்கீகரிக்க முடியும். 24 உறுப்பினர்களுக்கும் குறைவாக எண்ணிக்கையுள்ள கட்சிகள் குழுக்களாகத் தான் கருத முடியும். அவற்றின் பேரவைக் குழு நிர்வாகிகளில் செய்யப்படும் மாற்றங்களை அங்கீகரிக்க முடியாது" என்று கூறியிருக்கிறார். ஒரு கட்சியை எதிர்க்கட்சியாக அங்கீகாரம் செய்வதற்கு மட்டும் தான் 10 சதவீதம் உறுப்பினர்கள் தேவை. எதிர்க்கட்சியைத் தவிர மற்ற கட்சிகளின் நிர்வாகிகளின் தேர்வும் பேரவைத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டே வந்திருக்கின்றன. அவ்வாறு அங்கீகரிக்கப்படுவதன் அடிப்படையில்தான் அனைத்துக் கட்சிக் கூட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு அழைப்புகள் விடுக்கப்படுகின்றன. ஆனால், அந்த மரபை வசதிக்கேற்ப பேரவைத் தலைவர் மாற்றக் கூடாது.

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சித் தலைமையால் பரிந்துரைக்கப்பட்ட புதிய சட்டமன்ற நிர்வாகிகளுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்; அவர்களுக்கு முன்வரிசையில் இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு ஆகும். இதை பேரவைத்தலைவர் ஏற்றுக்கொள்வதற்கு எந்த தடையும் இல்லை.

முதன்மை எதிர்க்கட்சியின் நிர்வாகிகள் மட்டும் தான் அங்கீகரிக்கப்படுவார் என்றால், திமுக சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஒற்றை உறுப்பினர்களான கொங்கு நாடு மக்கள் கட்சியின் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தி. வேல்முருகன், இரு உறுப்பினர் கட்சியான மனிதநேய மக்கள் கட்சியின் பேராசிரியர் ஜவாஹிருல்லா, 4 உறுப்பினர்களைக் கொண்ட மதிமுகவின் சதன் திருமலைக் குமார் ஆகியோர் எந்த அடிப்படையில் முதல் வரிசையில் அமர வைக்கப்பட்டனர். திமுக சின்னத்தில் வெற்றி பெற்ற அவர்கள் திமுக சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பிரிவில் தானே அமர வைக்கப்பட வேண்டும்? அவர்களை முதல்வரிசையில் அமர வைப்பதற்கு பேரவையின் எந்த விதி இடமளித்தது?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி. ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கட்சியின் நாகை மாலி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சிந்தனைச் செல்வன், பா.ஜ.கவின் நயினார் நாகேந்திரன் ஆகியோர் சம்பந்தப்பட்ட கட்சிகளின் சட்டமன்றக்குழு தலைவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதால் தானே முதல் வரிசையில் அமர வைக்கப்பட்டனர்? அதே விதியை பாமகவுக்கு கடைபிடிப்பதில் பேரவைத் தலைவருக்கு என்ன தயக்கம்? அலுவல் ஆய்வுக்குழுவுக்கு இந்தக் கட்சிகளின் சட்டப்பேரவைக் குழு உறுப்பினர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்? விவாதங்களில் பேசயாருடைய பரிந்துரையின் பெயரில், முதன்மை எதிர்க்கட்சி அல்லாத பிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பதை அப்பாவு விளக்குவாரா? எல்லா கட்சிகளுக்கும் ஒரு நீதி, பாட்டாளி மக்கள் கட்சிக்கு மட்டும் தனி நீதியா? அல்லது ஆளுங்கட்சிக்கு தாளம் தட்டுவோருக்கு முன்வரிசை அளிப்பது தான் பேரவைத் தலைவர் உருவாக்கிய புதிய விதியா?

பாட்டாளி மக்கள் கட்சியின் நியாயமான வினாக்களுக்கு பதிலளிக்க முடியாத போதெல்லாம் இந்த விஷயங்களில் முடிவெடுப்பது தமது தனிப்பட்ட விருப்பம் என்றும், தமக்கு வானளாவிய அதிகாரம் இருப்பதாகவும் பேரவைத் தலைவர் அப்பாவு கூறிக்கொள்கிறார். இந்தியா போன்ற ஜனநாயக நாடுகளில் முதல்அமைச்சர், பேரவைத் தலைவர் போன்ற எவருக்கும் வானளாவிய அதிகாரம் கிடையாது; அவை அனைத்தும் கற்பனை தான். இங்கு ஜனநாயகம் தான் அனைத்துக்கும் அடிப்படை என்பதை பேரவைத் தலைவர் உணர்ந்து கொள்ள வேண்டும்; அதன்படியான நிர்வாகிகள் தேர்வை மதிக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் பேரவைத்தலைவர் இருக்கையை ஜே சிவசண்முகம் பிள்ளை, யு. கிருஷ்ணா ராவ், எஸ். செல்லப் பாண்டியன், சி.பா. ஆதித்தனார், கே. ராஜாராம், பிடி ஆர்பழனிவேல்ராஜன் போன்றவர்கள் அலங்கரித்திருக்கின்றனர். அவர்களைப் போல அனைவரும் செயல்பட வேண்டும் என்பது தான் எங்களின் எதிர்பார்ப்பு. இனியாவது பேரவைத் தலைவர் அறத்திற்கு பணிய வேண்டும்; நீதியை மதிக்க வேண்டும். அந்த வழியில் பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக எஸ்.பி.வெங்கடேஸ்வரன், துணைத்தலைவராக சதாசிவம், கொறடாவாக சி.சிவக்குமார் ஆகியோரை அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகர மாவட்டம் 61வது வார்டு BLA 2 BLA C கழக நிர்வாகிகளுக்கு தீபஒளி திருநாள் முன்னிட்டு மாமன்ற உறுப்பினர் திருமதி ஆதி மகேஸ்வரி திராவிடமணி அவர்கள் இனிப்புகள் வழங்கி வாழ்த்துக்கள் கூறியபோது உடன் வட்ட செயலாளர் தென்னவர் செல்வராஜ் பகுதி அவை தலைவர் K.P. ராமகிருஷ்ணன் சிங்கை சம்பத், குணசீலன் திருமூர்த்தி பூங்கொடி மாணிக்கம் முனுசாமி கலைச்செல்வன் மற்றும் கழக உடன் பிறப்புகள் உடனிருந்தனர்




## தூத்துக்குடியில் ஒன்றிணைவோம்! சமத்துவம் காண்போம்! விழிப்புணர்வு கருத்தரங்கம்




தூத்துக்குடி அக்.19

தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட காமராஜ் கல்லூரியில் நேற்று மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பில் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பாக ஒன்றிணைவோம்! சமத்துவம் காண்போம்! எனும் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் மாவட்ட எஸ்.பி. மாணவ மாணவிகளிடம் அனைவரும் பாகுபாடின்றி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும், போக்சோ சட்டங்கள் குறித்தும் மற்றும் போதைப் பொருளினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்தும் இளைஞர்கள் போதைப் பொருளை தவிர்த்து எதிர் காலத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என்றும் எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் அரசு குற்றவழக்கு தொடர்புத் துறை உதவி இயக்குனர் ராஜதுரை, தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு டி.எஸ்.பி. ஜமால், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் பிரபு, கல்லூரி முதல்வர் பானுமதி மற்றும் பேராசிரியர்கள் மாணவர்கள் உடனிருந்தனர்.

## செங்கல்பட்டில் ரெயில்கள் ஒரு மணி நேரத்திற்கு மேலாக காலதாமதம் பயணிகள் கடும் அவதி



சென்னை, அக்.19

செங்கல்பட்டு மாவட்டம் சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லும் ரெயில்கள் சிக்னல் காரணமாக சுமார் ஒரு மணிநேரம் செங்கல்பட்டு ரெயில்வே நிலையத்திலும் மற்றும் வழியிலும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. செங்கல்பட்டு ரெயில்வே நிலையம் அருகே பரனூர் என்ற இடத்தில் பாண்டிச்சேரி விரைவு ரெயிலும் செங்கல்பட்டில் விழுப்புரம் பேசஞ்சர் ரெயிலும் செங்கோட்டை விரைவு ரெயில் செங்கல்பட்டிலும்சேதுராமேஸ்வரம் விரைவு ரெயில் ஒத்திவாக்கத்திலும் நிறுத்தப்பட்டன.

அதுபோல முத்துநகர் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரெயில் செங்கல்பட்டு ரெயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டன. ரெயில்கள் அனைத்தும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நிறுத்தப்பட்டன. ரெயில்வே நிர்வாகம் தெரிவிக்கையில் விழுப்புரம் மார்க்கமாக செல்லும் அனைத்து ரெயில்களும் சிக்னல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், ரெயில்வே நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சிக்னல் கோளாறு சரி செய்யப்பட்டு ரெயில்கள் வழக்கம் போல் இயக்கப்பட்டன. சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக ரெயில்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள்கடும்அவதிக்கு ஆளாகினர்.

## திருநெல்வேலியில் கஞ்சா விற்ற வாலிபர் கைது



திருநெல்வேலி அக்.19

திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் ஆழ்வார் தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கீழபாப்பாக்குடி அருகேசந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த பாப்பாக்குடியை சேர்ந்த கனி (வயது 30) என்பவரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய 30 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது. இதுகுறித்து மேற்சொன்ன சப் இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு கனியை நேற்று கைது செய்தனர். மேலும் அவரிடம் இருந்து 30 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

## கரூர் சம்பவம்: எரிந்து கிடந்த காகிதங்கள்பென்டிரைவால் பரபரப்பு



கரூர், அக்.19

கரூர் சம்பவம் தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழுவினர், அங்குள்ள திட்ட அலுவலக வளாகத்தில் இருந்த கட்டிடத்தில் விசாரணை நடத்தி வந்தனர். சி.பி.ஐ. வசம் விசாரணை ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து, அவர்கள் அந்த அலுவலகத்தை காலி செய்து சென்றனர். அங்கிருந்த நாற்காலிகள், மேஜைகள் உள்ளிட்ட பொருட்கள் மீண்டும் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்துக்கு ஆயுதப்படை வாகனத்தில் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டன.

இதற்கிடையே, திட்ட அலுவலக வளாகத்தில் ஒரு பகுதியில் பல்வேறு காகிதங்கள் தீயில் எரிக்கப்பட்டு கிடந்தன. அதற்கு மத்தியில் ஒரு 32 ஜி.பி. பென்டிரைவும் எரிந்து சேதம் அடைந்த நிலையில் இருந்தது.

பொதுவாக ஒரு விசாரணை குழுவின் விசாரணை முடியும்போது தேவையில்லாத ஆவணங்களை எரிப்பது வழக்கம். அந்த வகையில் விசாரணைக்கு பயன்படுத்தப்பட்ட காகிதங்கள் எரிக்கப்பட்டதா? என்பது தெரியவில்லை. இருப்பினும் பென்டிரைவ் உள்ளிட்டவை எரிந்து கிடந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ரஷிய எண்ணெய் இறக்குமதியை மீண்டும் அதிகரித்த இந்தியா



புதுடெல்லி, அக்.19

உக்ரைன் மீது கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரியில் ரஷியா போர் தொடுத்ததை தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் ரஷியா மீது பொருளாதார தடைகளைவிதித்ததுடன், அந்த நாட்டில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியையும் ரத்துசெய்தன. இதைத்தொடர்ந்து இந்தியாவுக்கு மலிவு விலையில் ரஷியா கச்சா எண்ணெயை வழங்கியது. இதை பயன்படுத்தி இந்தியாவும் அதிக அளவில் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கி வருகிறது.

அந்தவகையில் கடந்த 201820ம் ஆண்டில் இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் வெறும் 1.7 சதவீதமாக இருந்த ரஷியாவின் பங்கு, 202324ம் ஆண்டில் 40 சதவீதமாக அதிகரித்தது. அதன் மூலம் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வழங்கும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை பிடித்து உள்ளது. இவ்வாறு ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அத்துடன் ரஷிய எண்ணெய் இறக்குமதிக்காக இந்தியா மீது 25 சதவீத கூடுதல் வரியையும் டிரம்ப் நிர்வாகம் விதித்தது.

இந்த நிலையில் கடந்த 15ந்தேதி அமெரிக்க ஜனாதிபதி திடீரென ஒரு அறிவிப்பு வெளியிட்டார். அதாவது ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்துவதாக பிரதமர் மோடி உறுதியளித்து உள்ளார்எனகூறினார். ஆனால் இதை மத்திய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் மறுத்து உள்ளார். பிரதமர் மோடி, டிரம்பிடம் அப்படி ஒரு போன் உரையாடல் நடத்தியது எனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

இதனால் இந்த விவகாரம் மத்திய அரசு வட்டாரத்தில் பேசுபொருளாகி இருக்கிறது. இது ஒருபுறம் இருக்க, இந்த அக்டோபர் மாதத்தின் முதல் பாதியில் இந்தியாரஷிய எண்ணெய் இறக்குமதியை மீண்டும் அதிகரித்து இருப்பதாகதகவல் வெளியாகி இருக்கிறது.

அந்தவகையில் கடந்த ஜூன் மாதம் வரை நாளொன்றுக்கு 20 லட்சம் பீப்பாய் இறக்குமதி செய்து வந்தது. பின்னர் ஜூலை முதல் செப்டம்பர் வரை நாளொன்றுக்கு 16 லட்சம் பீப்பாயாக குறைந்திருந்தது. இது அக்டோபர் மாதத்தில் மீண்டும் அதிகரித்து இருக்கிறது. அதாவது நாளொன்றுக்கு 18 லட்சம் பீப்பாய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருவதாக சர்வதேச வர்த்தக பகுப்பாய்வு நிறுவனமான கெப்ளர் தெரிவித்து உள்ளது.

ஜூலை செப்டம்பர் காலகட்டத்தில் எண்ணெய் இறக்குமதி குறைந்ததற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அமெரிக்க வரி விதிப்பு குறித்த கவலைகள் மற்றும் பருவகால காரணிகள் இதில் முக்கியமானவை ஆகும்.

குறிப்பாக பொதுத்துறை சுத்திகரிப்பு நிறுவனங்களான எம்.ஆர்.பி.எல்., சி.பி.சி.எல், பி.ஓ.ஆர்.எல் போன்றவற்றில் பராமரிப்பு நடவடிக்கைகள் அதிகரித்ததும் இந்த இறக்குமதி சரிவுக்கு காரணமாகும். தற்போது இந்த பணிகள் முடிவடைந்து இருப்பதுடன், பண்டிகை கால தேவைகளும் அதிகரித்து இருப்பதால் மீண்டும் இந்த இறக்குமதி அதிகரித்து இருப்பதாக கெப்ளர் நிறுவனத்தின் தலைமை ஆய்வாளர் சுமித் ரிடோலியா தெரிவித்தார்.

## ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம்: ரூ.43½ லட்சம் அபராதம், வரி வசூல்: போக்குவரத்து ஆணையர் தகவல்



சென்னை, அக்.19

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் கஜலட்சுமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆம்னி பஸ் உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் வசூலிப்பதை தடுப்பதற்கும், போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துவது தொடர்பாகவும் போக்குவரத்து ஆணையர் தலைமையில் காவல் துறை, போக்குவரத்துக்கழக அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு ஆம்னி பஸ் உரிமையாளர் சங்க நிர்வாகிகளுடன் கடந்த 14ந்தேதி மாநில போக்குவரத்து ஆணையரகத்தில் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வதற்கான பயணங்களைசிரமமின்றி மேற்கொள்ளவும், அதே சமயத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டும்

ஆம்னி பஸ்களை கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் சென்றுவர கூடுமான வரை வேண்டாம் எனவும் ஆம்னி பஸ் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஆம்னி பஸ்களில் 50 சதவீதம் மட்டுமே கிளாம்பாக்கம் பஸ் நிலையத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டு உள்ளது.

மேலும், பண்டிகை காலங்களில் ஆம்னி பஸ்கள் அதிக கட்டணம் வசூலிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டு அதனை கண்காணிக்கும் பொருட்டு தமிழகம் முழுவதும் உள்ள 12 சரகங்களில் சிறப்பு பறக்கும் படை குழு அமைக்கப்பட்டு 16ந்தேதி முதல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்மூலம் இது வரை 357 சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டு ரூ.43 லட்சத்து 55 ஆயிரத்து 961 அபராதம் மற்றும் வரியாக பெறப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து ஆம்னி பஸ் உரிமையாளர்களுக்கு தனியார் முன்பதிவு ஆன்லைன் செயலிகள் கண்காணிக்கப்பட்டு அதிகமாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ள ஆம்னி பஸ்களை கண்டறிந்து கட்டணங்களை குறைக்க அறிவுறுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## தூத்துக்குடியில் 16 ஆயுதப்படை காவலர்களுக்கு பணி மாறுதல் உத்தரவு: எஸ்.பி. வழங்கினார்



தூத்துக்குடி அக்.19

தூத்துக்குடி மாவட்ட ஆயுதப்படையில் பணிபுரியும் 16 காவலர்களை தாலுகா காவலர்களாக பணி நியமனம் செய்யும் பணி மாறுதலுக்கான கலந்தாய்வு கூட்டம் நேற்று மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் நடைபெற்றது. அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் நிலையங்களில் உள்ள காலிப்பணியிடங்களின் அடிப்படையிலும், அவர்களின் சீனியாரிட்டி அடிப்படையிலும் இந்த கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில், தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ்.பி. மதன், மாவட்ட காவல் அமைச்சுப்பணி, அலுவலக கண்காணிப்பாளர் உள்ளிட்ட உதவியாளர்கள்ஆகியோர் அடங்கிய குழுவினரால் கலந்தாய்வு நடத்தப்பட்டு, மேற்சொன்ன 16 காவலர்களுக்கு விருப்பப்பட்ட காவல் நிலையங்களுக்கு பணி மாறுதல் வழங்கி மாவட்ட எஸ்.பி. உத்தரவிட்டார்.

## மதுரை மாநகராட்சி முறைகேட்டின் மர்மம் எப்போது விலகும்? நயினார் நாகேந்திரன்



சென்னை, அக்.19

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

மதுரை மாநகராட்சியின் சொத்து வரி வசூலில் சுமார் ரூ.150 கோடிக்கும் அதிகமாக முறைகேடுகள் நடந்திருப்பதாகப் புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, மதுரைமேயர் இந்திராணி பொன் வசந்த் அவர்கள் தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது கடும் அதிர்ச்சியையும் பல்வேறு குழப்பங்களையும் ஏற்படுத்துகிறது.

திமுக அமைச்சர்களுக்கும், முக்கியப் பிரமுகர்களுக்கும் தொடர்பிருக்கலாம் எனச் சந்தேகிக்கக் கூடிய மதுரை முறைகேடு விவகாரத்தில் மேயரின் கணவர் தடாலடியாக கைது செய்யப்படுவதையும், மேயர் கமுக்கமாக ராஜினாமா செய்வதையும் பார்த்தால், சிறிய மீன்களைப் பலியிட்டு பெரிய தலைகளைக் காப்பாற்ற திமுக அரசு முயற்சிக்கிறதோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் வலுக்கிறது.

ஊழல் குற்றச்சாட்டு, நிர்வாகக் குளறுபடிகள், நம்பிக்கையில்லா தீர்மானம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், தமிழகத்தின் முக்கிய மாநகராட்சிகளான கோவை, நெல்லை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த திமுக மேயர்கள் இதுவரை ராஜினாமா செய்துள்ளனர். அந்த வரிசையில் தற்போது மதுரையும் இணைந்திருப்பது, உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிப்பதில் திமுக அரசு எந்தளவிற்கு தோல்வியடைந்துள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டு.

மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டிய தமிழக உள்ளாட்சி அமைப்புகளை, மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கும் கருவிகளாக மாற்றி வைத்திருப்பது தான் திமுக அரசின் நாடு போற்றும் நல்லாட்சியா? மக்களின் எதிர்ப்புகளைச் சமாளிக்க மேயர்கள் ராஜினாமா, புதுமேயர்பொறுப்பேற்பு எனத் திமுக அரசு என்னதான் நாடகம் ஆடினாலும், மாநிலம் முழுவதும் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகள், ஊழல் வரி வசூலில் நடக்கும் மோசடி குறித்து சி.பி.ஐ., விசாரணை நடத்தினால் தான் உண்மை வெளியே வரும். என தெரிவித்துள்ளார் .

## சாலைகள், தெருக்களில் சாதிப்பெயர்களை நீக்க தடை மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை அக்.19

மதுரை மேல அனுப்பானடி பகுதியை சேர்ந்த பரமசிவம் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், சமீபத்தில் தமிழகத்தில்உள்ளகுடியிருப்பு பகுதிகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது நிறுவனங்களின் பெயர்களில் உள்ள சாதி பெயர்களை நீக்குவது தொடர்பாக தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

இத்தனை ஆண்டுகளாக தெருக்கள், சாலைகளில் சாதி பெயர்கள் இருப்பதால் பிரச்சினை ஏற்பட்டதாக இதுவரை எந்த புகாரும் இல்லை. வருகிற சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்து தற்போதைய ஆளுங்கட்சி, மக்களிடையே பகைமையை ஊக்குவிக்கவும், பிளவுபடுத்துவதை நோக்கமாகவும் கொண்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இவ்வாறு தெருக்கள், சாலைகளின் பெயர்களை மாற்றுவதால் அப்பகுதியில் வசிப்பவர்கள் இருப்பிட சான்றுகளில் முகவரியை பயன்படுத்துவதில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தும். எனவே பெயர்களை நீக்குவதற்கு வழிவகை செய்யும் அரசாணையை ரத்து செய்யவேண்டும், என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இருதரப்பு வாதத்தையும் கேட்டறிந்த நீதிபதிகள், சாலைகள், தெருக்களில் உள்ள பெயர்களை மாற்றுவது சம்பந்தமாக கள ஆய்வு நடத்தலாம். இந்த வழக்கில் இறுதி முடிவு எடுக்கும் வரை பழைய பெயர்களை நீக்குவது, புதிய பெயர்களை அமல்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது எனவும், இந்த வழக்கு குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

## வரும் தேர்தலில் துரோகிகளுக்கு அமமுக பாடம் புகட்டும் டிடிவி தினகரன்

ராணிப்பேட்டை, அக்.19

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கரில் அ.ம.மு.க. நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அ.தி.மு.க. என்ற கட்சியை எம்.ஜி.ஆர். தொடங்கினார். அவர் உருவாக்கிய விதிகளை எல்லாம் எடப்பாடி பழனிசாமி நீக்கி விட்டார். புதிய விதிகளை உருவாக்கி தன்னை பொதுச்செயலாளராக அறிவித்துக் கொண்டார்.

கட்சியில் இருந்து களையை நீக்கி விட்டதாக எடப்பாடி பழனிசாமி தெரிவிக்கிறார். உண்மையில் அவர் துரோகத்தின் நஞ்சு செடியாக இருந்து கட்சியை அழித்து வருகிறார். தற்போது உள்ளது அதிமுக இல்லை, எடப்பாடி பழனிசாமி உருவாக்கிய கட்சி. வரும் தேர்தலில்அ.ம.மு.க.கூட்டணி, துரோகிகளுக்கு பாடம் புகட்டுவதோடு மட்டுமில்லாமல், வரும் தேர்தலில் வெற்றி கூட்டணியாகவும் அமையும்.

தமிழ்நாடு வளர்ச்சி நோக்கி பயணித்து வருகிறது. ஆனால் இன்னமும் இங்கு பலதரப்பு மக்கள் வாழ்வாதாரம் முன்னேறாமல் உள்ளது. திமுக அரசு, அறிவித்த பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. கரூர் சம்பவத்தை சில கட்சியினர் அரசியல் ஆக்குகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் இன்று 63 ஆயிரம் பேர் பயணம்

சென்னை அக்.19

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை வரும் 20ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதனிடையே, சனி, ஞாயிறு வார விடுமுறை என்பதாலும் திங்கட்கிழமை தீபாவளி என்பதாலும் வெளியூர்களில் வசித்து வரும் மக்கள் இன்றே தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர்.

அந்த வகையில் சென்னையில் இருந்து ஆயிரக்கணக்கானோர் இன்று சொந்த ஊர்களுக்கு செல்லத்தொடங்கியுள்ளனர். ரெயில்கள், அரசு, தனியார் பஸ்கள், கார்கள், பைக்குகள் என பல்வேறு வாகனங்களில் மக்கள் சொந்த ஊர் புறப்பட்டுள்ளனர். குறிப்பாக, சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு மக்கள் அதிக அளவில் புறப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் இன்று ஒரேநாளில் 63 ஆயிரம் பேர் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக அனைத்து ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்ட தகவலில்,

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் இன்று 1,810 பஸ்களில் 63 ஆயிரத்து 683 பேர் பயணம் செய்துள்ளனர். அதேவேளை, நாளை பயணம் செய்ய தற்போதுவரை 1,180 பஸ்களில் 47 ஆயிரத்து 610 பேர் முன்பதிவு செய்துள்ளனர். முன்னதாக நேற்று 1,383 பஸ்களில் 47 ஆயிரத்து 610 பேர் பயணம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகிழக்குப் பருவமழை: முன்னேற்பாட்டு பணிகள் தொடர்பாக மேயர் பிரியா தலைமையில் ஆய்வுக் கூட்டம்

சென்னை அக்.19

மேயர் பிரியா தலைமையில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக சேவைத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டுப் பணிகள்தொடர்பாக, சென்னை குடிநீர்வாரியம், சென்னை மாவட்ட ஆட்சியர்அலுவலகம், நீர்வளத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மாநகர காவல்துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, தமிழ்நாடு மீன்வளத்துறை, ஆவின், தென்னக ரெயில்வே துறை, மாநகரப் போக்குவரத்துக் கழகம், உணவுத் துறை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை வானிலை ஆய்வு மையம் உள்ளிட்ட தொடர்புடைய சேவைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மேயர் பிரியா தலைமையில் இன்று (17.10.2025) ரிப்பன் கட்டட வளாகக்கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் பேசும்போது தெரிவித்ததாவது:

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து துரிதமாக மேற்கொள்ள வேண்டும். மழைக்காலத்திற்கான நிவாரண மையங்கள் அனைத்து அடிப்படைவசதிகளுடன் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். உணவு தயாரிக்கும் கூடங்கள் அனைத்தையும் அலுவலர்கள் ஆய்வு செய்து தயார்நிலையில் வைத்திட வேண்டும். மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் மண் சேகரிப்புத் தொட்டிகளில்

தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாகவும் இப்பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களில் தனிக்கவனம் செலுத்தி மழைநீர் தேங்காத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியில் கால்வாய்களில் தூர்வாருதல், தடுப்புச்சுவர் அமைத்தல், தடுப்புச்சுவரை உயர்த்திக் கட்டுதல், சுவர்மேல்பகுதியில் கம்பிவேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கால்வாய்களில் மழைநீர்தடையின்றி செல்வதை உறுதி செய்திட வேண்டும். மழைக்காலங்களில் பணிகள் நடைபெறும் இடங்களில் உரிய தடுப்புகள் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு உணவுப் பொருள் தடையின்றி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆவின் பால் விநியோகம் தடையின்றி மக்களுக்கு கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மின் இணைப்புப் பெட்டிகள் அமைந்துள்ள இடங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும்.

மழைக்காலங்களில் விழும் நிலையில் உள்ள மரங்களை அகற்றுவதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் தயார் நிலையில் இருந்திட வேண்டும். ஆபத்தான நிலையில் உள்ள மரக்கிளைகளை அகற்றும் பணிகளைத் தொடர்ந்து விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

தற்போது ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையில் 150 இணைப்புகளுடன் 1913 உதவி எண் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தமையங்களில்பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ஒவ்வொரு சுழற்சி முறையிலும் தலா 60 நபர்கள் வீதம் 3 சுழற்சி முறைகளில் 180 நபர்கள் பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களில் வரப்பெறும் புகார்களை கண்காணித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள 25 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களின் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டார அலுவலகங்களில் தலா ஒரு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் என 3 வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் கூடுதல் பணியாளர்களை நியமித்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர்மீட்புப்படை, தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறை உள்ளிட்ட சேவைத் துறைகள் ஒருங்கிணைந்து பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குளங்கள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளிலும் சீரமைப்புப் பணிகள், புதிய குளங்கள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு அதிகளவில் நீர் சேமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என மேயர் அறிவுறுத்தினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆணவப் படுகொலை தடுப்பு சட்டம் இயற்ற ஆணையம்: எஸ்.டி.பி.ஐ. கட்சி வரவேற்பு

சென்னை, அக்.19

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் ஆணவக் கொலைகள் போன்ற கொடூரச் செயல்களைத் தடுப்பதற்கு உறுதியான சட்டரீதியான நடவடிக்கைகள் அவசியம் என்று எஸ்டிபிஐகட்சிதொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்துள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆணவக் கொலைகளைத் தடுக்கும் வகையில், ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்றும், அந்த ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் தனிச் சட்டம் இயற்றப்படும் என்றும், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளார். முதல்அமைச்சரின் இந்த அறிவிப்பை எஸ்டிபிஐ கட்சி வரவேற்கிறது.

தமிழகத்தில் ஆணவக் கொலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் சமூகத்தின் அடித்தளத்தை அசைக்கும் வகையில் நடைபெற்று வருகின்றன. இவற்றைத் தடுக்க தமிழக அரசு அதன் தீவிரத்தை உணர்ந்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எஸ்டிபிஐ கட்சி பல்வேறு தளங்களில் வலியுறுத்தி வருகிறது. ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எஸ்டிபிஐ மட்டுமின்றி, பல்வேறு சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன.

இந்தப் பின்னணியில் முதல்அமைச்சரின் இந்த அறிவிப்பு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆணவக் கொலைகள் பெரும்பாலும் சாதி, மதம் அல்லது குடும்பக் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயங்களால் நிகழ்கின்றன. இதனைத் தடுக்க இதுவரை இருக்கும் சட்டங்கள் போதுமானதாக இல்லாத நிலையில், தனிச் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்துள்ள நிலையில், முதல்அமைச்சரின் அறிவிப்பு சமூகத்தில் நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழக அரசு இந்த அறிவிப்பை உடனடியாக செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். ஆணையத்தின் பரிந்துரைகளைவிரைவாகப்பெற்று, ஆணவக் கொலைகளுக்கு எதிரான வலுவான தனிச் சட்டத்தை இயற்ற வேண்டும்.

இந்த விஷயத்தில் தமிழக அரசு தொடர்ந்து உறுதியுடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 17 வயது கல்லூரி மாணவியை மது குடிக்க வைத்து பாலியல் பலாத்காரம் மாணவர் மீது வழக்கு

சென்னை அக்.19

சென்னை பெரம்பூர் சபாபதி தெருவைச் சேர்ந்தவர் மணி (20 வயது). இவர் வியாசர்பாடியில் உள்ள ஒரு கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வருகிறார். கடந்த 6ந்தேதி இவருக்கு பிறந்த நாள் ஆகும். இதனால் தனக்கு தெரிந்த 17 வயது கல்லூரி மாணவியை பிறந்தநாள் விருந்து வைப்பதாக கூறி கொளத்தூர் அருகே உள்ள ரெட்டேரி பகுதிக்கு அழைத்துச் சென்றார். பின்னர் அங்குள்ள விடுதியில் அறை எடுத்து தங்கிய மணி, கல்லூரி மாணவியை மது குடிக்க வைத்ததுடன், அவரை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் செம்பியம் அனைத்து மகளிர் போலீசார், மணி மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# திருப்பூரில் கடந்த செப்டம்பர் மாதத்தில் ஆயத்த ஆடை ஏற்றுமதி வர்த்தகம் 10.1 சதவீதம் சரிவு

திருப்பூர், அக்.19

இந்தியாவின் ஆயத்த ஆடை ஏற்றுமதி தொடர்ந்து நிலையான வளர்ச்சியை பெற்றிருந்தது. அமெரிக்க வரி விதிப்புக்கு பிறகு ஏற்றுமதி வர்த்தகம் பாதிப்பை சந்தித்துள்ளது. இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியில் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் 69 சதவீத பங்களிப்பை வழங்கி வருகிறார்கள்.



ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஏ.இ.பி.சி.) அளித்த தகவலின்படி, இந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை 6 மாதங்களில் ஆயத்த ஆடை ஏற்றுமதி ரூ.65 ஆயிரத்து 989 கோடிக்கு நடந்துள்ளது. கடந்த நிதியாண்டில், இதே காலத்தில் ரூ.63 ஆயிரத்து 801 கோடிக்கு நடந்துள்ளது. முந்தைய ஆண்டைவிட 3.4 சதவீதம் வளர்ச்சியை எட்டியுள்ளது.

கடந்த மாதம் ரூ.8 ஆயிரத்து 43 கோடியே 55 லட்சத்துக்கு ஆயத்த ஆடை ஏற்றுமதி நடைபெற்றுள்ளது. 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ரூ.9 ஆயிரத்து 436 கோடியே 7 லட்சத்துக்கு ஏற்றுமதி நடந்துள்ளது. அதாவது ரூ.1,393 கோடி ஏற்றுமதி வர்த்தகம் முந்தைய ஆண்டைவிட குறைந்துள்ளது. இது அமெரிக்க டாலர் மதிப்பில் 10.1 சதவீதம் சரிவை சந்தித்துள்ளது. ஆனால் 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தை கணக்கிடும்போது 5.4 சதவீதம் வளர்ச்சியை பெற்றுள்ளது.

உலகளாவியநிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சந்தை ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும் ஏற்றுமதியாளர்கள் தரம், மற்றும் வினியோகத்தில் குறிப்பிடத்தக்க தகவமைப்பு மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். அரசின் கொள்கை ஆதரவு மற்றும் தயாரிப்பு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் சந்தை விரிவாக்கத்தை ஊக்குவிப்பதற்கு ஏ.இ.பி.சி. முக்கிய பங்கு வகித்து வருகிறது. சர்வதேச சந்தை தேவை அதிகரிப்பு, மேம்பட்ட நிலைத்தன்மை முயற்சிகள், மாற்று வியாபார உடன்பாடுகளால் இந்த நிதியாண்டில் வரும் மாதங்களில் அதிக வளர்ச்சியை எட்டும் என்று ஏ.இ.பி.சி. நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# அல்வா பாக்கெட் வைத்து ரீல்ஸ்காக அரசியல் செய்யும் எடப்பாடி பழனிசாமி: அமைச்சர் சிவசங்கர் தாக்கு

சென்னை, அக்.19






சென்னை தலைமைச் செயலகத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி திராவிட முன்னேற்றக் கழகம்குறித்துஒருபேட்டி அளித்திருக்கிறார். அவருடைய நிலைமை இவ்வளவு மோசமாக போகும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாத நிலைக்கு சென்றுவிட்டார். சட்டமன்றத்தில் பேச வேண்டியவர்; மக்கள் மன்றத்தில் பேச வேண்டியவர்; சட்டமன்ற அரசியல் மக்கள் மன்ற அரசியலைத் தாண்டி தற்போது கடைசியாக இன்ஸ்டாகிராம் ரீல்ஸ்க்கும் அரசியல் செய்ய வேண்டிய சூழலில் தள்ளப்பட்டுவிட்டார் என்பதுதான் பாவமாக இருக்கிறது.

ஒரு அல்வா பாக்கெட்டை வைத்துக் கொண்டு உருட்டுக்கடை அல்வா என்றெல்லாம் கதை விட்டிருக்கிறார். அவர்தான் இன்று திருட்டுக்கடை பழனிசாமியாக இருக்கிறார். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு அதிமுக எப்படி எடப்பாடி பழனிசாமி கைக்கு வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த அதிமுக என்ற கம்பெனியை சசிகலாவிடமிருந்து லீசுக்கு எடுத்து நடத்த ஆரம்பித்தவர் பாஜகவுடன் சேர்ந்து கொண்டு சசிகலாவை சிறைக்கு அனுப்பிவிட்டு திருட்டு கடை தனக்கு கைப்பற்றினார். அதற்குப் பிறகு டிடிவி தினகரனை ஏமாற்றினார். அவரிடம் இருந்து கைப்பற்றினார். அதற்கு பிறகு ஓ.பன்னீர்செல்வம் அவர்களுடன் ஒரு கூட்டணி வைத்துக்கொண்டு நீ பாதி நான் பாதி கண்ணே... என்று ஒரு பார்ட்னர்ஷிப் ஆரம்பித்து ஐந்து வருடம் கழித்தார். அதற்கு பிறகு அவரையும் ஏமாற்றினார். அவரிடம் இருந்தும் தட்டி தூக்கினார். திருட்டு கடை இதெல்லாம் முடிந்தது. எதிர்க்கட்சியானார். ஒரு ஐவர் அணியை உடன் வைத்துக்கொண்டு சுற்றினார். அதற்கு பிறகு இருவரணி ஆகிவிட்டது. அந்த ஐவரணியையும் ஏமாற்றிதிருட்டுகடையை வேலுமணி, தங்கமணி என்ற இருவரை மட்டுமே தன் உடன் வைத்துக் கொண்டு இருவர் அணியாக வைத்துக் கொண்டிருந்தார். தற்போது கடைசியாக டெல்லிக்கு சென்ற பிறகு என்ன ஆனார்? அந்த இருவர் அணியையும் கழற்றி விட்டு தன்னுடைய மகன் மிதுன் பழனிசாமியை மட்டும் வைத்துக் கொண்டு இன்றைக்கு அவர் செல்கிறார். இப்படி அதிமுகவை ஒரு திருட்டுக்கடை போல எல்லோரிடமும் கைப்பற்றி இருக்கின்றவர் திமுகவை பார்த்து உருட்டுக்கடை என்று சொல்வது எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

திமுக என்ன செய்திருக்கிறது? என்று மகளிர் உரிமைத் தொகை பெறும் ஒரு கோடியே 15 லட்சம் பேரிடம் சென்று கேட்டுப் பார்க்கட்டும். உண்மையாக அந்த திட்டம் நடைபெறுகிறதா? உருட்டா? என்று.. புதுமைப் பெண் திட்டத்தில் கல்லூரியில் தமிழகத்தில் பெண் குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களிடம் சென்று கேட்கட்டும் இது உருட்டா? உண்மையா? என்று... தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டு மாணவர்கள் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர்களைச்சென்று கேட்கட்டும் உருட்டா? உண்மையா? என்று... காலை உணவு திட்டம் பயிலும் பிள்ளைகளிடம் சென்று கேட்கட்டும். இப்படி நடக்கின்ற திட்டங்களை எல்லாம் மறைத்துவிட்டு நீட் ஏன் இரத்தாகவில்லை? கல்வி கடன் ஏன் ரத்தாகவில்லை? என்று கேட்கிறார்.

இதெல்லாம் மத்திய அரசின் அதிகாரத்தில் வருவது என்பது அவருக்கு தெரியும். தெரியவில்லை என்றால், அவர் ஏன் முதல் அமைச்சராக இருக்கிறார் என்ற கேள்வியே வரும். எதையெல்லாம் உண்மையோ அதையெல்லாம் மறைத்துவிட்டு எதையெல்லாம் கதை கட்டலாமோ அதையெல்லாம் வைத்துக் கொண்டு கதை விடுகிறார். இவருக்கு என்ன உருட்டுகடை என்றால், இவர்கள் கொடுத்த வாக்குறுதி பெண்களுக்கு செல்போன் கொடுப்போம் என்று கூறியது இருசக்கர வாகனம் கொடுப்போம் என்று கூறியது இது போன்று பெரிய பட்டியல் இருக்கிறது. இவர்கள் உருட்டிய உருட்டு.

எனவே மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றிக் காட்டிய அரசு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக அரசு. அப்படிப்பட்ட ஒரு முதல்அமைச்சராக இருக்கும் முதல்அமைச்சரை கிண்டல் செய்வதாக நினைத்துக்கொண்டு கேலி செய்வதாக நினைத்துக் கொண்டு இவர் இன்றைக்கு இந்த அரசியலை செய்கிறார். அதுவும் உண்மையான அல்வா அல்ல. அதில் பஞ்சு இருக்கிறது என்று வீடியோ பார்த்து பிறகுதான் தெரிந்தது. கடைசியில் அதுவும் திருட்டு அல்வாவாகதான் இருக்கிறது.

இந்த இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் அரசியல் அவருக்கு ஏன் வந்தது என்றால் சேர்வார் தோஷம். தற்போது அவர் யாரிடம் சேர்ந்து இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு இருக்கின்ற சிறு பிள்ளைகள் பள்ளி பிள்ளைகள் இன்ஸ்டாகிராமில் போடுவதை பார்த்து விட்டு அதில் ஒருவர் கேட்டார்.அந்தநீதிபதிக்கு கூட பின்பற்றுபவர்கள் இல்லை. எங்களுக்கு தான் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்கள் என்று... அதுபோன்று அந்த பின்பற்றுபவர்களுக்கு போட்டியாக பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு இன்ஸ்டாகிராமிலும், ரீல்ஸிலும் அதிகப்படுத்துவதற்கு ஒரு பேட்டியை கொடுத்திருக்கிறார்.

எனவே அதிமுக என்ற திருட்டு கடையை திருட்டுத்தனமாக கைப்பற்றி கையில் வைத்துக் கொண்டு திமுகவை எள்ளி நகையாடுகிற இந்த பணியை எடப்பாடி பழனிசாமி இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு மேல் இந்த வேலையில் இறங்க கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தலுக்கு முன்பாக அனைத்து கட்சிகளும் வாக்குறுதிகளை வாரி வழங்காமல்... டிடிவி தினகரன் அறிவுரை

காஞ்சிபுரம் அக்.19



ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள சோளிங்கர் பகுதியில் அ.ம.மு.க கட்சி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற இருக்கிறது. அக்கூட்டத்திற்கு அ.ம.மு.க பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் இருந்து செல்லும் போது, செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

திமுக தேர்தல் வாக்குறுதியில் அனைத்து மகளிருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று கூறிவிட்டு, ஆட்சிக்கு வந்தபிறகு தகுதி இருப்பவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் தற்போத தேர்தல் நேரம் என்பதால் அனைத்து மகளிருக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றனர். தமிழ்நாட்டில்இருக்கின்றஅனைத்துகுடும்பங்களுக்கும் முறையாக நிதி போய் சேர்ந்தால் மகிழ்ச்சிதான்.

கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினால் குடிமகனாக எனக்கு மகிழ்ச்சிதான். எதிர்க்கட்சியாக இருப்பதற்காக எதுவென்றாலும் பேசுவதற்கு நான் எடப்பாடி பழனிசாமி இல்லை.

தலைவர்கள் தான் தொண்டர்களை கட்டுப்படுத்தி பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு அவர் முறைத்ததால் நான்கு தட்டு தட்டப்பட்டது என்று திருமாவளவன் போன்ற தலைவர்கள் கூறுவது நல்லதல்ல. அது ஒரு தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும்.

கடந்த ஆட்சி காலத்தில் வாங்கிய கடனை நடப்பு ஆட்சிதான் கட்ட வேண்டும். 2026 பிறகு ஒரு புதிய அரசு அமைந்தால், அவர்கள் தான் இதுவரை வாங்கியுள்ள 5 லட்சம் கோடி கடனுக்கு வட்டியை கட்டவேண்டும். கூடுமான வரை கடனை அதிகரிக்காமல் இருக்க வேண்டும். அதுதான் வருங்கால வளர்ச்சிக்கு நல்லது. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல திட்டங்களை அறிவிப்பது இன்றைக்கு நன்றாக இருக்கும். ஆனால் கடன்தான் அதிகரிக்கும்.

2026 தேர்தலுக்கு முன்பாக அனைத்து கட்சிகளும் வாக்குறுதிகளை வாரி வழங்காமல், வருங்கால சந்ததி மற்றும் தமிழ்நாட்டு வளர்ச்சியை மனதில் கொண்டு தேர்தல் வாக்குறுதிகளை குறிப்பாக இலவச திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

இவ்வாறு அவர் கூறினார்.

# விமான உணவில் முடி பயணிக்கு ரூ.35 ஆயிரம் வழங்க ஏர் இந்தியாவுக்கு கோர்ட்டு உத்தரவு

சென்னை அக்.19

இலங்கையில் இருந்து கடந்த சில மாதங்களுக்குமுன் ஏர் இந்தியா விமானத்தில் பயணி ஒருவர் சென்னைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அந்த பயணிக்கு விமானத்தில் உணவு வழங்கப்பட்டது. அந்த உணவில் தலைமுடி இருந்துள்ளது. இதுகுறித்து விமான ஊழியர்களிடம் அந்த பயணி முறையிட்டுள்ளார். ஆனால், அந்த பயணிக்கு விமான பணியாளர்கள் வேறு உணவு வழங்கவில்லை. இதையடுத்து, சென்னை தரையிறங்கிய உடன் அந்த பயணி ஏர் இந்தியா விமான நிறுவனம் மீது போலீசில் புகார் அளித்தார். அந்த புகாரில் தலைமுடி விழுந்த உணவை சாப்பிட்டு தனக்கு வாந்தி, வயிற்று வலி உள்ளிட்ட உடல்நல பிரச்சினை ஏற்பட்டதாக தெரிவித்திருந்தார். மேலும், இந்த விவகாரத்தில் ஏர் இந்தியா நிறுவனம் தனக்கு ரூ. 11 லட்சம் இழப்பீடு வழங்கக் கோரி சென்னை உரிமையியல் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த உரிமையியல் கோர்ட்டு, பாதிக்கப்பட்ட பயணிக்கு ரூ. 1 லட்சம் இழப்பீடு வழங்க ஏர் இந்தியாவுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த உத்தரவை எதிர்த்து ஏர் இந்தியா நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, பயணிக்கு முடிவிழுந்த உணவை வழங்கி, பாதிப்பை ஏற்படுத்தியதற்கான பொறுப்பை ஏர் இந்தியா நிறுவனம் உணவு வழங்கும் ஓட்டல் நிறுவனத்திற்கு மாற்ற முயற்சிக்கிறது. இந்த சம்பவத்திற்கு ஏர் இந்தியா நிறுவனம்தான் பொறுப்பு என்று கோர்ட்டு கூறியது. மேலும், மனு தாரரான பயணிக்கு ஏர் இந்தியா நிறுவனம் 35 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட்டு வழக்கை ஐகோர்ட்டு முடித்து வைத்தது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
19.10.2025

# சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் 63 ஆயிரம் பேர் பயணம்

சென்னை அக்.19

நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை வரும்20ம்தேதிகொண்டாடப்படஉள்ளது. இதனிடையே, சனி, ஞாயிறு வார விடுமுறை என்பதாலும் திங்கட்கிழமை தீபாவளி என்பதாலும் வெளியூர்களில் வசித்து வரும் மக்கள் இன்றே தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர்.

அந்த வகையில் சென்னையில் இருந்து ஆயிரக்கணக்கானோர் இன்று சொந்த ஊர்களுக்கு செல்லத்தொடங்கியுள்ளனர். ரெயில்கள், அரசு, தனியார்பஸ்கள், கார்கள், பைக்குகள் என பல்வேறு வாகனங்களில் மக்கள் சொந்த ஊர் புறப்பட்டுள்ளனர். குறிப்பாக, சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு மக்கள் அதிக அளவில் புறப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் இன்று ஒரேநாளில் 63 ஆயிரம் பேர்பயணம் மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பாக அனைத்து ஆம்னி பஸ் உரிமையாளர்கள் சங்கம் வெளியிட்ட தகவலில்,

சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் இன்று 1,810 பஸ்களில் 63 ஆயிரத்து 683 பேர்பயணம்செய்துள்ளனர். அதேவேளை, நாளை பயணம் செய்ய தற்போதுவரை 1,180 பஸ்களில் 47 ஆயிரத்து 610 பேர் முன்பதிவு செய்துள்ளனர். முன்னதாக நேற்று 1,383 பஸ்களில் 47 ஆயிரத்து 610 பேர் பயணம் செய்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் இருந்து தென்மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ்களில் 63 ஆயிரம் பேர் பயணம்




சென்னை, அக்.19

சாதிய ஆணவப் படுகொலைவிவகாரம்தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் இன்று உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதவிகளில் அனைவருக்கும் சமவாய்ப்பு, சம அதிகாரம் ஆகியவற்றைத் தருவதன் மூலமாக யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே சீர்திருத்த இயக்கங்கள் போராடியது, வாதாடியது. பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி பெயரே கூடாது என சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றியுள்ளோம். இருக்கிறோம்.

ஆணவப் படுகொலைகளை தடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும். சட்ட வல்லுநர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்கள் கொண்ட இந்த ஆணையம் பல்வேறு தரப்பிலும் கருத்துகளை பெற்று உரிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும், அதன் அடிப்படையில்தனிச்சட்டம் இயற்றப்படும். அனைத்து விதமான ஆதிக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்று கூறினார்.

இந்த நிலையில், ஆணவக் கொலைகளைத் தடுக்க ஆணையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதற்கு விசிக தலைவர் திருமாவளவன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஆணவக் கொலைகளைத் தடுக்க சட்டம் இயற்ற தமிழ்நாடு அரசுகொள்கைமுடிவெடுத்திருப்பதை விசிக வரவேற்கிறது. நீதிபதி கே.என். பாஷா தலைமையில் ஆணையம் அமைத்து அதன்பரிந்துரைகளின்அடிப்பையில் சட்டமியற்றப்படுமென சட்டப்பேரவையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# நற்பணி மன்றம் துவங்கிய ஆதரவாளர்கள் விளக்கம் கொடுத்த அண்ணாமலை



சென்னை, அக்.19

திருநெல்வேலி மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு முன்னாள் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை பெயரில், அண்ணாமலை நற்பணி மன்றம் இன்று தொடங்கப்பட்டுள்ளது. இம்மன்றத்திற்கான கொடியை மன்றத்தின் நிறுவனத் தலைவர் நெல்லை வேல்கண்ணன் அறிமுகப்படுத்தியுள்ளார். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த நிலையில், இதுகுறித்து பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

வணக்கம். இன்றைய தினம், திருநெல்வேலியில், எனது பெயரில் நற்பணி மன்றம் அமைத்து, கொடி அறிமுகம் செய்துள்ளதாக, ஊடகங்களில் வந்த செய்தி கண்டேன். நீங்கள்என் மீது வைத்திருக்கும் அன்புக்கு மிகுந்த கடமைப்பட்டிருக்கிறேன். எனினும், இது போன்ற அமைப்புகள், கொடி உள்ளிட்டவற்றில் எனக்கு உடன்பாடு இல்லை.

எனவே, தயவுசெய்து, என் பெயர், புகைப்படம் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தும் இது போன்ற செயல்பாடுகளை உடனடியாகக் கைவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். வருங்காலத்திலும், இது போன்ற செயல்பாடுகளைத் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

சுவர் இருந்தால்தான் சித்திரம். எனவே, அனைவரும் முதலில், உங்கள் வாழ்க்கைக்கு, உங்கள் குடும்பத்தினர் நலனை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் அன்பிற்கும், ஆதரவுக்கும் மீண்டும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 17 வயது கல்லூரி மாணவியை மது குடிக்க வைத்து பாலியல் பலாத்காரம் மாணவர் மீது வழக்கு

சென்னை அக்.19

சென்னை பெரம்பூர் சபாபதி தெருவைச் சேர்ந்தவர் மணி (20 வயது). இவர் வியாசர்பாடியில் உள்ள ஒரு கல்லூரியில் 3ம் ஆண்டு படித்து வருகிறார். கடந்த 6ந்தேதி இவருக்கு பிறந்த நாள் ஆகும். இதனால் தனக்கு தெரிந்த 17 வயது கல்லூரி மாணவியை பிறந்தநாள் விருந்து வைப்பதாக கூறி கொளத்தூர் அருகே உள்ள ரெட்டேரி பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

பின்னர் அங்குள்ள விடுதியில் அறை எடுத்து தங்கிய மணி, கல்லூரி மாணவியை மது குடிக்க வைத்ததுடன், அவரை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின்பேரில் செம்பியம் அனைத்து மகளிர் போலீசார், மணி மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (19.10.2025)




புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.




உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.




சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.




வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.




தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.




நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.




புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.




உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.




வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.




அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.




புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.




மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# தீபாவளிக்கு விடுமுறை தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, அக்.19

தீபாவளி பண்டிகை வருகிற 20ந்தேதி கொண்டாடப்பட உள்ளது. இந்த நிலையில்தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகல்லூரிகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு தீபாவளிக்கு மறுநாள் (21.10.2025) விடுமுறை விடப்படுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த ஆண்டு 20ந்தேதி தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசுஅலுவலர்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோரின் நலனைக் கருத்தில் கொண்டு 21 ந்தேதி ஒரு நாள் மட்டும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அந்த விடுமுறைதினத்தை ஈடு செய்யும் வகையில் 25 ந்தேதி பணி நாளாக அறிவித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஹால்" படத்தின் மாட்டிறைச்சி காட்சி வழக்கு: படத்தை காண நீதிமன்றம் முடிவு




அறிமுக இயக்குநர் வீர் இயக்கத்தில், மலையாள நடிகர் ஷேன் நிகாம் கதாநாயகனாக நடித்துள்ள புதிய படம், 'ஹால்'. இந்தப் படத்திற்கு தணிக்கைச் சான்றிதழை பெறுவதற்காக, படக்குழுவினர் விண்ணப்பித்திருந்தனர்.

ஹால்' படத்தில் இருந்து மாட்டிறைச்சி பிரியாணி சாப்பிடும் காட்சி மற்றும் சில வசனங்களை நீக்க வேண்டுமென மத்திய தணிக்கை வாரியத்தின்அதிகாரிகள்அறிவுறுத்தியுள்ளனர். ஆனால், படக்குழுவினர் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதால், 'ஹால்' திரைப்படத்துக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்தக் காட்சி மற்றும் வசனத்தை நீக்கினால் படத்தின் கதையை அது மாற்றக்கூடும் எனக் கருதும், படக்குழுவினர், தணிக்கை வாரிய அதிகாரிகளின் உத்தரவை எதிர்த்து கேரள ஐகோர்ட்டில் முறையிட்டுள்ளனர். முன்னதாக, 'ஹால்' திரைப்படம், மலையாளம், இந்தி, தெலுங்கு, தமிழ் மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் கடந்த செப்டம்பர் 12 ம் தேதியன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இதனை எதிர்த்து, ஹால் படக்குழுவினர் கேரள உயர் நீதிமன்றத்தில் முறையிட்டனர். இந்த விவகாரம் குறித்த விசாரணையில், ஹால் திரைப்படத்தை நீதிமன்றமோ அல்லது அவர்கள் நியமிக்கும் பிரதிநிதியோ பார்க்க வேண்டும் என்று படக்குழுவின் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தநிலையில், நீதிபதி வி.ஜி. அருண்ஹால்திரைப்படத்தைவிரைவில்பார்க்கபோவதாகக்கூறியதுடன், திரையிடலில் தணிக்கை வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

# 'எனக்கு அந்த ஹீரோவை ரொம்ப பிடிக்கும்...அவரோடு நடிக்க ஆசை' ருக்மிணி வசந்த்



ருக்மிணி வசந்த் தற்போது பலரது இதயங்களை வென்று இந்திய அளவில் பிரபலமாகி இருக்கிறார். சினிமாவில் நுழைந்த குறுகிய காலத்திலேயே தனக்கென ஒரு இமேஜை உருவாக்கிக் கொண்டுள்ளார். கன்னடத்தில் பல படங்களில் நடித்துள்ள இவர், ரக்ஷித் ஷெட்டியுடன் இணைந்து சப்த சாகரலு திரைப்படத்தில் நடித்ததன் மூலம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார்.

இந்தப் படத்திற்குப் பிறகு, நிகில் சித்தார்த்துக்கு ஜோடியாக 'அட்டு ஆபூ ஈப்பூ ஈப்பூ' திரைப்படத்தில் நடித்ததன் மூலம் தெலுங்கில் அறிமுகமானார். ஆனால் இந்தப் படம் அவருக்கு ஏமாற்றத்தை அளித்தது. தமிழில் விஜய் சேதுபதியுடன் ஏஸ் படத்திலும், சிவகார்த்திகேயனுடன் மதராஸி படத்திலும் நடித்திருந்தார்.

சமீபத்தில் காந்தாரா 2 படத்தில் நடித்திருந்தார். அதில் அவரது அழகும் நடிப்பும் பார்வையாளர்களை கவர்ந்தது. இப்போது இவருக்கு இந்திய அளவில் ஒரு பெரிய வரவேற்பு கிடைத்துள்ளது.

இதற்கிடையில், முன்னதாக ஒரு நேர்காணலில் பங்கேற்ற ருக்மிணி வசந்த், தெலுங்கில் தனக்குப் பிடித்த ஹீரோவைப் பற்றி கூறினார். தெலுங்கில் உங்களுக்கு எந்த ஹீரோ பிடிக்கும்? யாருடன் நடிக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டபோது.. நேச்சுரல் ஸ்டார் நானி தான் தனக்குப் பிடித்த ஹீரோ என்று கூறினார். அவருடன் படம் நடிக்க விரும்புவதாகவும் கூறினார். தற்போது, ருக்மிணி வசந்த் தெரிவித்த இந்த கருத்துகள் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.

# 6 வயதிலேயே முன்னணி கதாநாயகி...ஒரே ஆண்டில் 12 படங்கள்...19 வயதில் சோகம் யார் அவர் தெரியுமா?

திரையுலக ரசிகர்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்த பல கதாநாயகிகள் இருக்கிறார்கள். 16 வயதில் திரையுலகில் தலைகாட்டிய ஒரு நடிகை...துரதிர்ஷ்டவசமாக 19 வயதில் காலமானார். அந்த நேரத்தில், அவரது மரணம் திரையுலகத்தையே உலுக்கியது. அவர் யார் தெரியுமா..? அவர்தான் நடிகை திவ்ய பாரதி.

கிட்டத்தட்ட 21 படங்களில் நடித்த அவர் அந்த நேரத்தில், அதிக சம்பளம் வாங்கும் நடிகை. ஆனால் திவ்ய பாரதி 19 வயதில் இறந்தது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. திவ்ய பாரதி 1990ம் ஆண்டு தனது 16 வயதில் 'நிலா பெண்ணே' என்ற தமிழ் திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். பின்னர் வெங்கடேஷுக்கு ஜோடியாக 'பாபிலி ராஜா' என்ற திரைப்படத்தில் தெலுங்கில் அறிமுகமானார். அந்த நேரத்தில் இந்த படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அவரை பிரபலமாக்கியது. அதன் பிறகு அவருக்கு தொடர்ச்சியான வாய்ப்புகள் தேடி வந்தன. பல சூப்பர் ஹிட் படங்களில் நடித்த திவ்ய பாரதி, ஷாருக்கானுடன் இணைந்து 'தீவானா' படத்தில் நடித்தார் பின்னர், அவர் தனது 19 வயதில் மும்பையில் அடுக்குமாடி குடியிருப்பின் ஐந்தாவது மாடி பால்கனியில் இருந்து விழுந்து இறந்தார். 1992 முதல் 1993 வரை அவர் ஒரே ஆண்டில் 12 படங்களில் நடித்தார். திவ்யாவின் கடைசி படம் 'ஷத்ரஞ்ச்' ஆகும், இது டிசம்பர் 1993ல் மரணத்திற்குப் பின் வெளியானது.

# ரோகித், கோலி இருப்பது கில்லுக்கு சிறப்பானதாக இருக்கும்: அக்சர் படேல்




இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் நாளை நடக்கிறது. டெஸ்ட் மற்றும் டி20 போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட இந்திய நட்சத்திர வீரர்களான விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோர் 7 மாதத்துக்கு இடைவெளிக்கு பிறகு களம் திரும்புகின்றனர்.

இந்த போட்டி குறித்து இந்திய அணியின் ஆல்ரவுண்டர் அக்ஷர் பட்டேல் கூறுகையில்,

'இந்திய அணியில் ரோகித், கோலி இருப்பது கில்லுக்கு சிறப்பானதாக இருக்கும். முன்னாள் கேப்டன்களான அவர்களது ஆலோசனை கில் கேப்டன்ஷிப்பில் வளர உதவிகரமாக இருக்கும். கில் கேப்டன்ஷிப்பில் நல்ல விஷயம் என்னவென்றால் அவர் அழுத்தத்துக்கு ஆளாகமாட்டார்.

டிராவிஸ் ஹெட் சொன்னது போல், ரோகித் சர்மா, விராட் கோலி இருவரும் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள். முதல் ஆட்டத்துக்கு பிறகு அவர்களது பார்ம் எப்படி இருக்கிறது என்பதை பார்ப்போம். அவர்கள் தொழில்முறை வீரர்கள் என்பதால் என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும். பெங்களூருவில் உள்ள இந்திய கிரிக்கெட் வாரியத்தின் சிறப்பு மையத்தில் பயிற்சி எடுத்துள்ள அவர்கள் தயாராக இருப்பதாக நினைக்கிறேன். அவர்கள் வலைப் பயிற்சியில் சிறப்பாக விளையாடினர். மேலும் அவர்களது உடல் தகுதி நன்றாக இருக்கிறது' என்றார்.

# முதல் டி20 போட்டி: நியூசிலாந்து இங்கிலாந்து அணிகள் மோதல்



நியூசிலாந்துக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர், 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. இதில் முதலாவது டி20 போட்டி கிறைஸ்ட்சர்ச்சில் இன்று (சனிக்கிழமை) நடக்கிறது. மிட்செல் சான்ட்னெர் தலைமையிலான நியூசிலாந்து அணியில் பேட்டிங்கில் ரச்சின் ரவீந்திரா, மார்க் சாப்மேன், டேரில் மிட்செல், டிம் ராபின்சனும், பந்து வீச்சில் மேட் ஹென்றி, ஜேம்ஸ் நீஷம், கைல் ஜாமிசன், ஜேக்கப் டப்பியும் வலுசேர்க்கின்றனர்.

இதேபோல் ஹாரி புரூக் தலைமையிலான இங்கிலாந்து அணியில் பில் சால்ட், ஜோஸ் பட்லர், ஜேக்கப் பெத்தேல், சாம் கர்ரன், பிரைடன் கார்ஸ், அடில் ரஷித் என தரமான வீரர்களுக்கு பஞ்சமில்லை. சமபலம் வாய்ந்த அணிகள் மல்லுக்கட்டும் இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு குறைவு இருக்காது. இந்திய நேரப்படி காலை 11.45 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை சோனி ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

# ஆஸி.தொடரில் விராட், ரோகித் 3 சதங்கள் அடித்தாலும் 2027 உலகக்கோப்பையில்... அகர்கர்

இந்திய கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் 5 இருபது ஓவர் போட்டியில் விளையாட ஆஸ்திரேலியா சென்றுள்ளது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் நாளை நடக்கிறது. இந்த தொடரில் இந்திய அணி புதிய கேப்டன் சுப்மன் கில் தலைமையில் களமிறங்க உள்ளது.

அவரது தலைமையில் முன்னணி வீரர்களான விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா விளையாட உள்ளது எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில் சர்வதேச டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்ட இருவரும் ஏறக்குறைய 7 மாதம் கழித்து மீண்டும் சர்வதேச களத்திற்கு திரும்பி இருப்பது ரசிகர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

அத்துடன் ஆஸ்திரேலிய மண்ணில் விராட் மற்றும் ரோகித் சர்மாவுக்கு இது கடைசி சர்வதேச தொடராக இருக்கலாம் என கூறப்படுகிறது. ஏனெனில் தங்களது கெரியரின் கடைசி கட்டத்தில் இருக்கும் இருவரும் 2027 உலகக்கோப்பை வரை விளையாட வேண்டும் என்பதே அவர்களுடைய கனவாகவும் விருப்பமாகவும் இருக்கிறது.

அந்த தொடரில் விளையாட இருவரும் பார்மில் இருப்பது அவசியம். ஆனால் அதற்கு முன் அவர்களை கழற்றி விட இந்திய அணி நிர்வாகம் தயாராகியுள்ளது. அதனாலேயே ரோகித் சர்மாவை கழற்றி விட்டுள்ள தேர்வுக்குழு சுப்மன் கில் தலைமையிலான புதிய அணியை உருவாக்கத் தொடங்கியுள்ளது. இதனால் அவர்கள் இருவரும் 2027 ஒருநாள் உலககோப்பை தொடரில் விளையாடுவார்களா? என்ற கேள்வி அனைவரது மத்தியிலும் எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர் இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாக சில கருத்துகளை கூறியுள்ளார். இது தொடர்பாக சமீபத்திய பேட்டி ஒன்றில் பேசிய அகர்கர், "ரோகித் சர்மா, விராட்கோலியைஒவ்வொருபோட்டியிலும்மதிப்பிடுவதுசரியானதாகஇருக்காது. அவர்கள்விளையாடஆரம்பித்தவுடன் அவர்களது ஆட்டம் குறித்து மதிப்பீடு செய்வோம். ஆனால் அது அணியில் இடத்தை உறுதி செய்வதற்கானதகுதி தேர்வாக இருக்காது. ஆஸ்திரேலிய தொடரில் அவர்கள் ரன் குவிக்காவிட்டால் நீக்கப்படுவார்கள் என்றோ, அதே நேரத்தில் ஆஸ்திரேலிய தொடரில் 3 சதங்கள் அடித்தால் 2027ம் ஆண்டு உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பெறுவார்கள் என்றோ அர்த்தம் கிடையாது" என்று கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.